




# நீர் 2026 பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கான வழிகாட்டி

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

vote.nz

E231 Tamil A4 08/26

## 2026 இல் எதை எதிர்பார்க்கலாம், எப்படி வாக்களிப்பது

### நீர் பதிவு செய்துள்ளதையும் உமது விபரங்கள் இற்றையாகி உள்ளதையும் உறுதி செய்க.

நீர் 2026 பொதுத் தேர்தலில் வாக்களிக்க **ஒற்றோபர் 25 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்கு முன்னர்** பதிந்திருக்க வேண்டும். உமக்கு ஒற்றோபர் 26 திங்கட்கிழமை வாக்களிப்பு தொடங்கியதும் பதிவு செய்யவோ உமது விபரங்களை இற்றையாக்கவே இயலாமலாகும்.

நீர் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ளவராகவும் ஒரு நியூசிலாந்துப் பிரசையாகவும் அல்லது ஒரு நிரந்தரக் குடியிருப்பாளராகவும் உமது வாழ்க்கையில் எப்போதாவது நியூசிலாந்தில் தொடர்ந்து 12 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வசித்திருந்தால் நீர் பதிவு செய்தாக வேண்டும்.

நீர் நியூசிலாந்திற் சட்டப்படி வசிப்பவராகவும் குறிப்பான காலத்துக்குள் வெளியேறத் தேவையின்றியும் இருந்தால் தேர்தல் நோக்கங்களுக்காக நீர் ஒரு குடியிருப்பாளராகக் கருதப்படுவீர்.

## உமது விபரங்களை இணையத்திற் பதிவு செய்தல், சரிபார்த்தல் அல்லது இற்றையாக்கல்

**பதிவு செய்வது நீர் ஒரு முறை மட்டுமே செய்யும் ஒன்றன்று. நீர் வாக்களிக்கத் தயாராக இருக்கவென நீர் உமது பதிவை இற்றையாக வைத்திருக்க வேண்டும்.**

உமது நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்துக் கடவுச்சீட்டு அல்லது RealMe சரிபார்க்கப்பட்ட அடையாளம் ஆகியவற்றைப் பயன்படுத்தி **vote.nz** இற் உமது விபரங்களைப் பதிவு செய்வது, சரிபார்ப்பது, அல்லது இற்றையாக்குவது எளிது.

நீர் இவற்றையும் செய்யலாம்:

- ஒரு பதிவுப் படிவத்தைக் கேட்க **0800 36 76 56** ஐ அழைக்கலாம் அல்லது
- அஞ்சலில் ஒரு பதிவுப் படிவத்தை அனுப்பச் சொல்லி உமது பெயரையும் முகவரியையும் **3676** இற்கு உரைச் செய்தியாக அனுப்பலாம்.

## உமது EasyVote அட்டை

நீர் ஒற்றோபர் 4 ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் பதிவு செய்தால் உமக்கு ஓர் EasyVote அட்டை அனுப்பப்படும்.

நீர் எம்மிடம் உமது மின்னஞ்சல் முகவரியைத் தந்திருந்தால் நீர் மின்னஞ்சல் மூலம் உமது EasyVote அட்டையை பெறுவீர்.

எம்மிடம் உமது அஞ்சல் முகவரி மட்டும் இருந்தால் நீர் அதை அஞ்சலிற் பெறுவீர்.

நீர் பிரசுரிக்கப்படாத பட்டியலில் இருந்தால் உமக்கு அஞ்சலில் ஒரு வாக்குச் சீட்டு அனுப்பப்படும்.

உமது EasyVote அட்டை வாக்களிப்பதை விரைவானதாகவும், எளிதானதாகவும் மாற்றும்.

நீர் அஃதின்றியும் வாக்களிக்கலாம், ஆனால் வாக்குச் சாவடியில் அதற்குச் சற்றுக் கூடுதலான நேரம் எடுக்கலாம்.

நீர் ஒற்றோபர் 4 ஞாயிற்றுக் கிழமைக்குப் பின்னர், ஆனால் ஒற்றோபர் 25 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்கு முன்னர் பதிவு செய்தால் நீர் EasyVote அட்டையைப் பெற மாட்டீர்.

## எப்போது எங்கு வாக்களிப்பது

நீர் வாக்களிக்கத் தேர்தல் நாள் வரை காத்திருக்க வேண்டியதில்லை.

**வாக்களிப்பு தொடங்குவது: ஒற்றோபர் 26 திங்கள்**
**வாக்களிப்பு முடிவது: தேர்தல் நாளான நவம்பர் 7 சனி மாலை 7 மணி**

வாக்குச் சாவடிகள் ஒற்றோபர் 26 திங்கள் முதல் நவம்பர் 7 சனி வரை திறந்திருக்கும்.

நீர் வாக்குச் சாவடிகள் திறந்திருக்கும் நாட்களும் நேரங்களும் உட்பட அவற்றைப் பற்றிய தகவல்களை **vote.nz** இல் அல்லது **0800 36 76 56** ஐ அழைத்துப் பெறலாம்.

தேர்தல் நாளான நவம்பர் 7 சனிக் கிழமை எல்லா வாக்குச் சாவடிகளும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்.

**உமக்கு மேலும் தகவல் தேவையா?**

- **vote.nz** என்ற இணையத்தளத்திற்குச் சென்றிடுங்கள்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழைத்திடுங்கள்

பதிவு செய்வதையும் வாக்களிப்பதையும் பற்றிய தகவல்கள் மற்ற மொழிகளிலும் மாற்று வடிவங்களிலும் **vote.nz** இற் காணப்படுகின்றன

இத்தகவல்களை உமது குடும்பத்தினருடனும் நண்பருடனும் பகிர்ந்து அவர்களுக்கு வாக்களிக்க ஆயத்தமாக உதவுக.

# வாக்களிக்கும் முறை

## 1 உமது EasyVote அட்டையைக் கொண்டு வருக

உமது EasyVote அட்டையை அல்லது வாக்குச் சீட்டை உம்முடன் கொண்டு வருவது உமது வாக்களிப்பை விரைவாக்கும்.




நீர் உமது EasyVote அட்டையை மின்னஞ்சல் மூலம் பெற்றிருந்தால் நீர் உம்முடன் உமது சாதனத்தைக் கொண்டு வந்து உமது அட்டையை எமக்குத் திரையிற் காட்டலாம்.

நீர் விரும்பினால் நீர் வாக்குச் சாவடிக்குச் செல்ல முன்னர் அதைத் தரவிறக்கி அச்செடுக்கலாம் அல்லது உமது அட்டையைத் திரையச்சு எடுக்கலாம்.

உமது EasyVote அட்டையின் மீது உமது விபங்கள் இருக்கும் நீர் மட்டுமே அதைப் பயன்படுத்தலாம்.

நீர் வாக்களிக்கப் போகும் பொழுது உம்மிடம் உமது EasyVote அட்டை இல்லாதிருந்தாலும் நீர் வாக்களிக்கலாம்.

## 2 வாக்குச் சாவடியில் உமக்கு உதவ யாரேனும் இருப்பார்கள்

என்ன செய்ய வேண்டும் என்பதையும், எங்கு செல்ல வேண்டும் என்பதையும் உங்கள் வாக்குச் சாவடியில் உள்ள தேர்தல் பணியாளர்கள் உங்களுக்குக் காண்பிப்பார்கள்.

## 3 பொதுத் தேர்தலில் வாக்களித்தல்

ஒரு பொதுத் தேர்தலில், உங்களுக்கு இரண்டு வாக்குகள் இருக்கும் - கட்சி வாக்கு மற்றும் வாக்காளர் தொகுதி வாக்கு

### உங்கள் கட்சி வாக்கு

உங்கள் கட்சி வாக்கு என்பது நீங்கள் ஆதரவளிக்க விரும்பும் கட்சிக்கானது ஆகும்.

இந்த வாக்கானது நாடாளுமன்றத்தில் ஒவ்வோர் அரசியல் கட்சியும் பெறுகின்ற இடங்களின் மொத்த எண்ணிக்கையைப் பெரிதும் தீர்மானிக்கின்றது. கட்சி வாக்கில் அதிகப் பங்கைப் பெறும் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெறும்.

நீங்கள் பொது வாக்காளர் பட்டியலில் இருந்தாலும் அல்லது மாவோரி பட்டியலில் இருந்தாலும் அதே அரசியல் கட்சிகளின் பட்டியலில் இருந்து நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

உங்கள் வாக்குச் சீட்டில், நீங்கள் விரும்பும் அரசியல் கட்சியின் பெயருக்கு அருகில் ஒரு டிக் குறி இடவும்.

### உங்கள் வாக்காளர் தொகுதி வாக்கு

உமது தேர்தல் தொகுதி வாக்கு நீர் வசிக்கும் பகுதிக்குப் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க நீர் விரும்பும் வேட்பாளரைத் தெரிவு செய்யவாகும்.

நீர் மாவோரி பட்டியலில் இருந்தால் நீர் மாவோரி வாக்காளர் தொகுதியில் நிற்கும் ஒரு வேட்பாளருக்காக வாக்களிப்பீர்.

நீங்கள் பொதுப் பட்டியலில் இருந்தால், பொது வாக்காளர் தொகுதியில் நிற்கும் வேட்பாளருக்காக நீங்கள் வாக்களிப்பீர்கள்.

உமது வாக்குச் சீட்டில் உமது உள்ளூர்ப் பகுதியின் பிரதிநிதியாகச் செயலாற்ற நீர் அதிகம் விரும்பும் வேட்பாளரின் பெயருக்கு அருகில் ஒரு சரி இடுக. அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் உமது தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.




## 4 உமது வாக்குச் சீட்டை வழங்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டியிற் போடுக

அவ்வளவு தான் - நீங்கள் வாக்களித்து விட்டீர்கள்!

### வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியவில்லையா?

நலக் குறைவின், மூப்பின், அல்லது உடற்குறையின் காரணமாக உமக்கு வாக்குச் சாவடிக்குப் போக இயலாவிடின் நீர் வாக்களிக்க உதவி பெறலாம்.

நீர் ஒரு பராமரிப்பு இல்லத்தில் இருந்தால் வாக்களிக்கும் சேவைகளுக்கு ஏற்பாடு செய்ய உமது உள்ளூர்த் தேர்தல் தொகுதி முகாமையாளர் உமது பராமரிப்பு இல்லத்தைத் தொடர்பு கொள்வார்.

நீர் மருத்துவமனையில் இருப்பதால் உமக்கும் காரணத்தால் உமக்கு வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியா விட்டால் ஒற்றோபர் 26 திங்கட்கிழமை முதல் உமது வாக்குத் தாளை ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினர் உமக்குக் கொண்டு வரலாம்.

மேலும் தகவல்களை **vote.nz** இல் தெரிந்து கொள்க அல்லது உமது தெரிவுகளைப் பற்றிப் பேச **0800 36 76 56** ஐத் தொடர்பு கொள்க.

### வெளிநாட்டில் இருந்து வாக்களித்தல்

ஒற்றோபர் 26 திங்கட்கிழமை வாக்களிப்பு தொடங்கும் பொழுது நீர் அவோட்டியாரோ நியூசிலாந்து என்பதில் இருந்தால், நீர் வெளியாக முன்னர் வாக்களிப்பது எளிது.

நீர் வெளிநாட்டில் இருந்து வாக்களிப்பதாக இருந்தால் நீர் கட்டாயமாக ஒற்றோபர் 25 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்குள் (நியூசிலாந்து நேரம்) பதிவு செய்திருக்க வேண்டும். நீர் **vote.nz** இல் உமது விபரங்களைப் பதியலாம் அல்லது இற்றை செய்யலாம்.

நீர் வெளிநாட்டிலிருந்து ஒற்றோபர் 21 புதன் முதல் நவம்பர் 7 சனி மாலை 7 மணி வரை (நியூசிலாந்து நேரம்) வாக்களிக்கலாம்.

வெளிநாட்டிலிருந்து வாக்களிக்க எளிதானதும் விரைவானதுமான வழி உமது வாக்குத் தாளைப் பதிவிறக்கி அதை நிரப்பி அதை **vote.nz** இற் பதிவேற்றுவதாகும்

நீர் ஒரு வெளிநாட்டு வாக்குச் சாவடியிலும் வாக்களிக்க முடியும். வெளிநாட்டு வாக்குச் சாவடிகளின் ஒரு பட்டியல் **vote.nz** இல் உண்டு.

இத்தெரிவுகள் உமக்குச் செயற்படாவிடின், **overseas@vote.nz** இற்கு மின்னஞ்சல் அனுப்புக அல்லது உதவிக்காக **+64 9 909 4182** என்ற அழைக்க (சர்வதேச அழைப்பு கட்டணங்கள் பொருந்தலாம்).

### உமக்கு உமது வாக்குச் சீட்டுகளை வாசிக்க அல்லது குறியிட உதவி தேவையா?

உமக்கு உமது வாக்குச் சீட்டை வாசிக்க அல்லது குறியிட ஒரு நண்பர், குடும்ப உறுப்பினர் அல்லது வாக்குச் சாவடியிற் பணியாற்றும் யாராவது ஒருவர் உதவலாம். அவர் செய்யக் கூடியன:

- உங்களுடன் வாக்களிக்கும் திரைக்குப் பின்னால் செல்லலாம்
- வாக்குச் சீட்டில் உள்ள வார்த்தைகளையும் தகவல்களையும் வாசித்துக் காட்டலாம்
- நீர் அவரிடம் கேட்டுக் கொண்டால் உமக்காக வாக்குச் சீட்டிற் குறியிடலாம்.

அவர் உம்மிடம் நீர் யாருக்கு வாக்களிக்க வேண்டுமெனச் சொல்லக் கூடாது.

நீர் மற்றோரின் உதவியின்றி உமது வாக்குச் சீட்டிற் குறியிட முடியாத அளவுக்கு பார்வையற்றவராகவோ, பகுதியளவு பார்வையற்றவராகவோ, உடற்குறை கொண்டவராகவோ இருந்தால் நீர் தொலைபேசி வாயிலான குரற் சேவையைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

இந்தச் சேவையைப் பயன்படுத்த நீர் பதிவு செய்ய வேண்டும். நீர் **ஒற்றோபர் 5** முதல் **0800 028 028** ஐ அழைத்து 1 ஐத் தெரிவு செய்து அல்லது **dictation@vote.nz** இற்கு மின்னஞ்சலிட்டுப் பதியலாம்.

இச்சேவை பற்றி மேலுமறிய **vote.nz** இற்குச் செல்க.

